# முன்பள்ளிக் கல்வித் திட்டத்தில் அழகியற் கல்வியின் முக்கியத்துவமும் சிறுவர் பாடல்களும்

திருமதி.கிருபாசக்தி கருணா

**அறிமுகம்**

மனிதருள் பல வேறுபாடுகள் இருந்தாலும் அவர்களுக்கு இருக்கக் கூடிய இரசனை உணர்வு வித்தியாச மற்றது. இந்த இரசனை உணர்வை நல்ல முறையிலே பயன்படுத்தி வளர்த்தெடுப்பது முக்கியமானதாகும். ஒருவனுடைய இரசனை நல்வழியில் மட்டுமின்றி தீய வழியில் செல்வதற்கும் சாத்தியங்கள் உள்ளன. எனவே அவனில் இருக்க வேண்டிய இரசனை உணர்வை நல்ல ஆன்மீகக் கலைகள் மூலமாகவும் நல்ல கலாசார விழுமியங்கள் மூலமாகவும் வெளிக் கொணர வேண்டியது அவசியமாகின்றது.

குழந்தை பிறக்கும் போதே சில இயைபாக்கங்களுடன் பிறக்கிறது. அழகியற் கல்வியின் தன்மைகளை ஒரு குழந்தையின் சிறுவயதிலிருந்தே ஊட்டி வளர்ப்பது மிகுந்த வெற்றியைத் தரும் என்பது அநுபவ ரீதியான உண்மை. மேற் கூறிய கருத்துக்களுக்கமைய இலங்கை உட்பட்ட பல நாடுகள் பாடசாலைக் கலைத் திட்டத்தில் அழகியற் கல்வியை உள்ளடக்கி உள்ளன. இதற்கமைய முன்பள்ளிக் கல்வித் திட்டத்திலும், ஆரம்பக் கல்வித் திட்டத்திலும் அழகியற் கலைகளை இணைத்துள்ளன.

**கலைகளில் இசை**

கலைச் சிறப்பில்லாத காலகட்டம் மனித வாழ்வின் மங்கிய வரலாறாகக் கருதப்படுகிறது. கலையைப் பற்றி விளக்கம் தரும் டி.வி. நாராயணசாமி "கலை என்பது மக்களது வாழ்வியலை, பண்பாட்டை, நாகரீகத்தை எடுத்துக் காட்டும் கண்ணாடி" என்று கூறுகிறார். மக்கள் வாழ, வளர, சமுதாய நீதிகளையும் அறத் தத்துவங்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிட கலையைப் போல் வேறு சாதனம் இல்லை என்றும் கூறுகின்றார். இவ்வாறான கலைகள் அறுபத்துநான்கிலுள் இசைக்கலை சிறப்புடையதும் முதன்மையானதும் ஆகும்.

**இசைக்கலை**

ஒலியின் அடிப்படையில் அமைவது இசைக்கலை. இசைக்கு விளக்கம் தரும் ச.வே. சுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகிறார். "செவிவழிப் புகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களை இசையவும் பொருந்தவும் வைக்கின்ற பொழுது இசை ஒலிகள் என்ற பெயரைப் பெறுகின்றன."

**அழகியற்கல்வி அறிமுகம்**

உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் கலையே அழகியல் ஆகும். லலித கலைகள் எனப்படும் சங்கீதம், நாட்டியம், நடனம், ஓவியம், சிற்பம் போன்றவை இதனுள் அடங்கும். அனைத்து உயிரினங்களையும் தன் வசப்படுத்தும் இசை, உள்ளத்திற்கு அமைதியையும், சாந்தியையும், சந்தோசத்தையும் உண்டாக்கக் கூடியது.

மென்மையான ஒலிகளைக் கேட்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் இரசனை உணர்வுள்ள குழந்தைகளைப்

பிரசவிக்கின்றனர். குழந்தை கருவில் இருக்கும்போதே இரசிக்கத் தொடங்குகிறது. ஒலி வேறுபாடுகளுக்கமைய வேறுபட்ட அசைவுகைள் பிரதிபலிக்கின்றது. ஒலி வேறுபாடுகளை இனம்பிரித்து அறியும் ஆற்றல் இயல்பாகவே குழந்தைகளில் வளர்ச்சியடைகின்றது. இந்த இசை ஆற்றல் படிப்படியாக வளர்ச்சியடையும் போது இசைக்கேற்ப கண்கள், முகம், உடல் உறுப்புகள் அனைத்தையும் ஓர் உணர்வுடன் அசைக்கத் தொடங்குகின்றன. இதுவே அழகியல் உணர்வு என்று சொல்லப்படுகின்றது. எனவே இந்த அழகியல் உணர்வு என்பது பிள்ளைப் பராயத்திலிருந்தே வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

**முன்பள்ளிக் கல்வித் திட்டத்தில் இசை**

ஒவ்வொரு குழந்தையும் மூன்று வருடங்களின் பின் முன்பள்ளி நிலையத்திற்குச் செல்கின்றது. அங்கே குழந்தை ஆடல், பாடல், விளையாடல் எனும் மூன்று செயற்பாடுகள் மூலமாகக்கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இதேவேளை பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனக்குத் தொடர்பு இல்லாத புதியவர்களுடன் இருக்க வேண்டிய கட்டாயத்தின் பேரிலுள்ள குழந்தை ஒரு தனிமை, இனம்புரியாத ஒரு பயம் ஆகியவற்றால் ஆட்கொள்ளப்படுகின்றது.

முன்பள்ளி ஆசிரியை ஒருவர் இக் குழந்தையின் தனிமையையும் பயத்தையும் போக்குவதற்குக் கையாளக்கூடிய இலகுவான செயற்பாடு பாடல்களை இசையுடன் கற்பித்தல் ஆகும். ஏனெனில் குழந்தைகள் பொதுவாகப் பாட்டை விரும்புபவர்கள். எனவே பாடல் ஒன்றைப் பாடிக்காட்டி அவர்களைப் பாட வைப்பதன் மூலமாக அவர்கள் அனைத்தையும் மறந்து அச்செயற்பாட்டில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள். இதன் மூலமாகத் தனிமைத் தன்மையும், பயமும் சிறிது சிறிதாக மறையத் தொடங்க ஆசிரியை மேல் ஒரு பாசம் ஏற்படும் எனவே, அந்த ஆசிரியை பாடலின் மூலமாகக் குழந்தைகளின் மனதில் ஓர் இடத்தைப் பெற்று விடுகின்றார். அக் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டிய கருப்பொருளை ஒரு சிறிய பாடல் மெட்டு மூலமாக இலகுவாகவும் ஆணித்தரமாகவும் கற்பிக்க முடிகின்றது.

நல்லபண்பாடுள்ள சமுதாயத்திற்கு மிக இன்றியமையாதது நன்கு திட்டமிட்ட தொடக்கக்கல்வியாகும். இந்தியாவில் குழந்தைப் பருவக்கல்வி ஓர் உன்னத நிலையில் உள்ளது. இவர்களுக்குரிய பாடத்திட்டங்கள் அனைத்தும் (Pre K.G L.K.G, U.K.G) பாடல்களுடனும் அபிநயத்துடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. உலக சமுதாய சேவா சங்கமும் அசேபா சர்வசேவா கல்வி அறக்கட்டளையும் சேர்ந்து ஒரு புதிய சமுதாய சீர்திருத்தத்திற்கு அடிப்படையான பாடத்திட்டங்களை வகுத்து எல்.கே.ஜி முதல் ஐந்தாம் வகுப்பு வரை பாட நூல்களைத் தொகுத்துள்ளன. இவற்றில் மழலையர் நிலைக்கென்று தனியாக பாடநூலைத் தயாரித்துள்ளார்கள். இந்நூலிலுள்ள பாடத்திட்டத்திற்குரிய கருப்பொருள் யாவும் பாடல் மூலமாகவே கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் கீழ் "ஆசிரியருக்குக் குறிப்பு" என்ற தலைப்பில் "பாடலை இராகத்தோடு பாடச்செய்க" என்று குறிப்பட்டுள்ளதை இங்கு சுட்டிக்காட்டுதல் சாலப் பொருந்தும்.

**சிறுவர் பாடல்கள்**

ஆடலும் பாடலும் அவற்றினூடாகப் பெறும் ஆனந்தமும் மகிழ்ச்சியும் சிறுவர்களின் ஆற்றலையும், அறிவையும் வளர்க்கும் செயற்பாடுகளாகும். இந்த

வகையில் இசை கலந்த ஓசைச் செறிவுடைய அழகான பாடல்கள் முன்பள்ளிக் கல்விக்கு வலிமை சேர்ப்பனவாக அமைகின்றன. இப் பாடல்களைப் பின்வருமாறு இரண்டு வகையாக நோக்கலாம்.

1. உள விருத்திப் பாடல்கள்
2. உணர்வு ரீதியான பாடல்கள்

**உளவிருத்திப் பாடல்டகள்**

பொதுவாகக் குழுந்தைகளுக்குரிய பாடல்கள் ஒரு பொருளைப் பற்றியிருக்கும் என்று சொல்ல முடியாது. இப்பாடல்களை டாக்டர் சு.சக்திவேல் அவர்கள் பத்து வகையாக பகுத்துள்ளார். அவை பின்வருமாறு.

1. நாப்பயிற்சிப்பாடல்கள்
2. எண்ணுப் பயிற்சிப் பாடல்கள்
3. அறிவு வளர்ச்சிப் பாடல்கள்
4. நீதிப்பாடல்கள்
5. பக்திப்பாடல்கள்
6. பறவை மிருகங்கள் பற்றிய பாடல்கள்
7. விழாக்காலப் பாடல்கள்
8. வேடிக்கைப் பாடல்கள்
9. வினாவிடைப் பாடல்கள்
10. விளையாட்டுப்பாடல்கள்

எ-டு

1. **நாப்பயிற்சிப் பாடல்கள் :** (Tongue Twister Songs) சொற்களைத் திருத்தமுறத் தெளிவுடன் உச்சரிக்கப் பயிற்சி கொடுப்பதற்கு இப்பாடல் உதவும். இப் பாடல்கள் ஒரு வித இசையுடன் கற்பிக்கப்படும்.

“ஒடுற நரியிலே ஒரு நரி கிழநரி
கிழநரி முதுகிலே ஒருபடி நரைமயிர்”

2. **எண்ணும் பயிற்சிப் பாடல்கள்**

“ஒன்னு ரெண்டு மூணு
உனக்கும் எனக்கும் வேணும்
நாலு அஞ்சு ஆறு
நல்ல தயிர் சோறு
ஏழு எட்டு ஒன்பது
எப்போ அதைத் தின்பது
பத்து ஆச்சு ஆச்சு
பசியும் போச்சு போச்சு

**03. விழாக்காலப் பாடல்கள்**

கிறிஸ்மஸ் தாத்தா வந்தாரே
கேக்கு எனக்குத் தந்தாரே
பாடி ஆடி வந்தாரே
பரிசு பலவும் தந்தாரே

**உணர்வு ரீதியான பாடல்கள்:**

எ-டு:

**01. இரக்கம்**

“கூண்டில் கிளியை அடைத்தது யார்?
குற்றம் செய்தது அதுவல்ல
கூண்டுக் கிளியைப் பறக்க விட்டுக்
குற்றம் இன்றி வாழ்வோமே”

**02. அன்னையின் சிறப்பு**

“பாலை நமக்கு ஊட்டிடுவாள்
பாசம் தன்னைப் பொழிந்திடுவாள்
காலை முதலாய் மாலை வரை
கண்ணே போல காத்திடுவாள்”

**முடிவுரை**

1. ஒரு கருத்தைப் பாடல் மூலம் கற்பித்ததை விட இராகத்துடன் (குழந்தைகளுக்கேற்ற மெட்டு) கற்பிப்பது மாணவர்களுக்கு இலகுவில் பதிந்துவிடும் என்பது உணரப்பட்டுள்ளது.

2. இப்பாடல்களைக் கற்றுக் கொடுக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறந்த பயிற்சி கொடுக்க வேண்டும்.

3. ஒரு குழந்தை சிறுவயதிலிருந்தே கலாசார சமூக செயற்பாடுகள் மூலமாக இசையுடன் கூடிய அநுபவரீதியான உணர்வுடன் வருகின்ற காரணத்தால்,

அவனுடைய இரசனை உணர்வை நல்ல முறையிலே வளர்த்தெடுக்க வேண்டிய கடமை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உரியது.

4. அழகியற் கல்வியின் மூலம் ஒவ்வொரு மாணவனும் நேர் மனப்பாங்கு, மொழி விருத்தி, கூட்டாகச் செயற்படும் மனப்பாங்கு சரியாக உச்சரிக்கும் திறன் ஆகியவற்றில் தன்னை வளர்த்துக் கொள்ள முடியும்.

**உசாத்துணை நூல்கள்**


01. (தொகுப்பு) அறிஞர் குழு, உலகசமுதாய சேவா சங்கம், ஆழியாறு, அசேபா சர்வ சேவா கல்வி அறக் கட்டளை, ஈரோடு (2005) **வாழ்க்கை வளக்கல்வி,** *முதலாம் வகுப்பு,* மதுரை, வேதாத்திரி பதிப்பகம்.

02. (தொகுப்பு) அறிஞர் குழு, உலக சமுதாய சேவா சங்கம் ஆழியாறு, அசேபா சர்வசேவா கல்வி அறக் கட்டளை ஈரோடு, (2005) *வாழ்க்கை* **வளக்கல்வி,** மழலையர் நிலை - *02* மதுரை, வேதாத்திரி பதிப்பகம்.

03. இந்தியா மொழிகள் நடுவண் நிறுவனம், இந்திய அரசு, (1998) **மழலைத் தளிர்கள்,** தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.

04. இராமநாதன் (டாக்டர்) ஆறு, (1986) **நாட்டுப்புறவியல்** சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம்.

05. சக்திவேல். (டாக்டர்).சு, (1983) **நாட்டுப்புற இயல் ஆய்வு,** சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம்.

06. சுப்பிரமணியன் ச.வே, (1980) **தமிழர் தோற் கருவிகள்,** சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.